# தாமல் ஊராட்சியில் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 271 பேருக்கு ரூ.21 லட்சம் நலத்திட்ட உதவிகள்: விழுப்புரம் கலெக்டர் சுப்பிரமணியன் வழங்கினார்

விழுப்புரம், மார்ச்.16

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், தாமல் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமுக்கு மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை வகித்து 271 பயனாளிகளுக்கு ரூ.21 லட்சத்து 41 ஆயிரம் நலத்திட்ட உதவிகளை வழங் கினார்.

இம்முகாமில் மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை வகித்து கலந்து கொண்டு வருவாய்த் துறையின் மூலம் முதியோர் உதவித்தொகையாக 100 பயனாளிகளுக்கு ரூ.12 லட்சமும், 42 பயனாளிகளுக்கு ரூ.6,88,000 மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், பட்டா மாற்றம் 52 பயனாளிகளுக்கும், நத்தம் பட்டா கணக்கு திருத்தம் 9 பயனாளி களுக்கும், 53 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும், வேளாண்மைத்துறை சார்பாக 8 பயனாளிகளுக்கு சிறு விவசாய சான்றுகளையும், 7 பயனாளிகளுக்கு ரூ.2,53,000 மதிப்பீட்டில் வேளாண் உபகரணங்களையும் என மொத்தம் 271 பயனாளிகளுக்கு ரூ.21,41,000 மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் சுப்பிரமணியன் வழங்கினார்.

இவ்விழாவில் கலெக்டர் சுப்பிரமணியன் பேசியதாவது:–

விழுப்புரம் மாவட்டம் 2011 ம் ஆண்டு முதல் தானிய உற்பத்தியில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இதற்கு காரணமாக இருந்த ஒவ்வொரு விவசாயிகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வருடம் 201718ம் ஆண்டு நுண்ணீர் சொட்டு நீர் பாசனம் மூலமாக 41,000 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.318 கோடி செலவில் விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு, 30,000 ஏக்கர் நிறைவுபெற்று, 10,000 ஏக்கர் பணிகள் நிலுவையில் உள்ளது. நுண்ணீர் சொட்டுநீர் பாசனம் மூலம் பயிர் செய்ய குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், பெரு விவசாயிகளுக்கு 70 சதவீத மானியமும் அரசு வழங்குகிறது. மேலும், வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.353 காப்பீடு செய்தால், ஒரு ஏக்கர் பயிர் சேதத்திற்கு இழப்பீடாக ரூ.23,500 விவசாயிகளுக்கு வழங்க வழிவகை செய்யப் பட்டுள்ளது.

இந்த வருடமும் நமது மாவட்டத்தில் நடப்பு காரிப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், கம்பு, பருத்தி, மக்காச்சோளம், மணிலா



மற்றும் தோட்டக் கலை பயிர்களான வாழை, மஞ்சள், மரவள்ளி மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் பயிர் காப்பீட்டு செய்து கொள்ளலாம். இதற்கான காப்பீட்டு கட்டணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் காப்பீட்டு முகவர்கள் மூலம் பெறப்படுகிறது. இந்த வருடம் விவசாயிகளின் நலன் கருதி தற்பொழுது அரசால் புதியதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள பொது சேவை மையங்களை அணுகி காப்பீட்டு கட்டணம் செலுத்தி கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு அந்தந்த வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை அணுகலாம்.

மேலும்,விழுப்புரம் மாவட்டத்தை திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத மாவட்டமாக உருவாக்க வேண்டும். எனவே உடனடியாக கழிப்பறை இல்லாதவர்கள், அப்பகுதி வட்டார வளர்ச்சி அலுவலரை நேரில் சந்தித்து, தனிநபர் கழிப்பறை கட்ட விண்ணப்பித்து அரசு வழங்கும் ரூ.12,000 நிதியுதவி பெற்று உடனடியாக தனிநபர் கழிப்பறைகளை கட்ட கேட்டுக்கொள்கிறேன். மேலும் குழந்தை திருமணத்தை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். 18 வயதிற்கு முன் எவரேனும் திருமணம் செய்தால் உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இதற்கான உறுதிமொழி யினை அனைவரும் ஏற்க வேண்டும். பெண் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம் அரசு பள்ளிக்கல்வித்துறை அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது. இதனை பயன்படுத்தி அனைவரும் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.

## 30 நாளில் நடவடிக்கை

மக்கள் தொடர்பு முகாம் நடைபெறுவதற்கு முன்பாகவே இப்பகுதியில் வசிக்கும் மக்களிடம் நேரடியாக மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்களை சம்மந்தப்பட்ட துறையினால் பரிசீலித்ததன் வாயிலாக பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நேற்று அதிக அளவில் மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னதாகவே இம்மனுக்களை கொடுத்திருந்தால், சம்மந்தப்பட்ட துறைகளிடம் அனுப்பப்பட்டு, இவர்களுக்கும் நேற்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க ஏதுவாக அமைந்திருக்கும். எனவே, நேற்று பெறப்பட்ட மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளிடம் அனுப்பப்பட்டு 30 நாட்களுக்குள் மனுக்கள் மீது உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இம்முகாமில் திருக்கோவிலூர் சப்கலெக்டர் சாருஸ்ரீ, தனித்துணை கலெக்டர் ரஞ்சனி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அருணாசலம், உதவி இயக்குநர் (நிலஅளவை) சண்முகம், வேளாண்மை இணை இயக்குநர் செல்வ ராஜ், வேளாண்மை அலுவலர் சுரேஷ், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் பாலசுப்பிர மணியன், உளுந்தூர்பேட்டை காவல் கண்காணிப்பாளர் இராஜேந்திரன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செங்கற்சூளையில் கொத்தடிமைகளாக பணிபுரிந்த 147 பேர் மீட்பு

திருவள்ளூர், மார்ச் 16–

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பாண்டேஷ்வரம் பகுதியில் தனியார் செங்கற்சூளையில் 147 பேர் கொத்தடிமைகளாக பணிபுரிந்தவர்களை வருவாய் அலுவலர்கள் மூலம் மீட்கப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மாவட்ட கலெக்டர் சுந்தரவல்லி நேரில் சந்தித்து அடிப்படை வசதிகளை அனைவருக்கும் ஏற்படுத்தி தருமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மாவட்ட கலெக்டர் சுந்தரவல்லி செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

ஆவடி வட்டம், பாண்டேஷ்வரம் பகுதியில் செயல்பட்டு வந்த தனியார் செங்கற்சூளையில் 147 நபர்கள் கொத்தடிமைகளாக பணியில் ஈடுபட்டிருந்தனர். இத்தகவலை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நேரடியாக ஆய்வு மேற்கொண்டதில் 63 ஆண்கள், 49 பெண்கள் மற்றும் 35 குழந்தைகள் என மொத்தம் 147 நபர்கள் உள்ளனர் என்பதை கண்டறியப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சதிஷ்கர் மாநிலம் ராய்ப்பூர் பகுதி சேர்ந்தவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரையும் மீட்டு திருநின்றவூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டு உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் அவர்களுக்கு தேவைப்படும் மருத்துவ பரிசோதனைகளையும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவர்கள் அனைவருக்கும் அரசு விதியின் மூலம் ஒவ்வொருவருக்கும் ரூ. 20 ஆயிரம் நிதி அவர்களது கணக்கில் சேர்க்க வேண்டும். இவ்வாறு மாவட்ட கலெக்டர் கூறினார்.


## IGARASHI MOTORS INDIA LIMITED

**Corporate Identification Number (CIN):** L29142TN1992PLC021997
**Registered Office:** Plot Nos. B-12 to B-15, Phase II, MEPZ–SEZ, Tambaram, Chennai 600 045
**Tel. No.:** +91 44 4229 8199, +91 44 2262 8199 | **Fax:** +91 44 2262 8143
**Email:** investorservices@igarashimotors.co.in | **Website:** www.igarashimotors.com

**Recommendations of the Committee of Independent Directors ("IDC") on the Open Offer to the Shareholders of Igarashi Motors India Limited by Mr. Padmanabhan Mukund ("Acquirer") along with Agile Electric Sub Assembly Private Limited ("PAC 1") and Igarashi Motors Sales Private Limited ("PAC 2") under Regulation 26(7) of SEBI (Substantial Acquisition of Shares and Takeovers) Regulations, 2011,as amended (SEBI (SAST) Regulations, 2011).**

| | | |
|---|---|---|
| 1. | Date | March 15, 2018 |
| 2. | Name of the Target Company (TC) | Igarashi Motors India Limited |
| 3. | Details of the Offer pertaining to TC | The Open Offer is being made by Acquirer along with PACs to acquire up to 7,958,196(Seventy Nine lakhs Fifty Eight Thousand One Hundred Ninety Six) Equity Shares, constituting 26% of the total Issued, Subscribed & Paid-up Equity Share Capital and Voting Capital of the Target Company at a price of ₹809.96 (Eight Hundred nine and Paisa Ninety six only) in cash pursuant to Regulations 4 and 5 of the SEBI (SAST) Regulations, 2011. |
| 4. | Name(s) of the acquirer and PAC with the acquirer | **Acquirer:** Mr. Padmanabhan Mukund **PACs** – Agile Electric Sub Assembly Private Limited and Igarashi Motors Sales Private Limited |
| 5. | Name of the Manager to the offer | Karvy Investor Services Limited 46, Avenue 4, Street No.1, Banjara Hills, Hyderabad 500 034, Telangana , India **SEBI Registration No.:** INM000008365 |
| 6. | Members of the Committee of Independent Directors (IDC) | i. Mr. S Radhakrishnan (Chairman) ii.Mr. Hemant M Nerurkar (Member) |
| 7. | IDC Member's relationship with the TC (Director, Equity shares owned, any other contract / relationship), if any | IDC members are the Independent Directors of the Target Company and they are not holding any Equity Shares in the Target Company. Other than the position of Directorship, there are no other contracts / relationship with the Target Company. |
| 8. | Trading in the Equity shares/other securities of the TC by IDC Members | None of the IDC members has traded in the equity shares of Target Company during the twelve months prior to the date of Public Announcement dated May 03, 2017. |
| 9. | IDC Member's relationship with the acquirer (Director, Equity shares owned, any other contract / relationship), if any. | None of the IDC members has any relationship with the Acquirer and PACs. |
| 10. | Trading in the Equity shares/other securities of the acquirer by IDC Members | None of the IDC members has at any time acquired or sold equity shares of the Acquirer and PACs. |
| 11. | Recommendation on the Open offer, as to whether the offer is fair and reasonable | IDC members believe that the Open Offer price of ₹809.96 /- per equity share is fair and reasonable and is in line with SEBI (SAST) Regulations, 2011. |
| 12. | **Summary of reasons for recommendation** | The IDC has reviewed the Public Announcement ("PA") dated May 03, 2017, the Detailed Public Statement ("DPS") dated September 04, 2017, published on September 05, 2017, the Draft Letter of Offer ("DLOF") dated September 11, 2017and Letter of Offer dated March 08, 2018("LOF"). The IDC has taken into consideration the following for making this recommendation: (i) A review of the contents of PA, DPS, DLOF and LOF leads the IDC to opine that the offer price offered by the Acquirer along with PACs is in compliance with the SEBI (SAST) Regulations, 2011. Based on the above, the IDC is of the opinion that the offer price to the shareholders of the Target Company is in compliance with the requirements of the SEBI (SAST) Regulations, 2011 and is fair and reasonable. The shareholders of the Target Company are advised to independently evaluate the offer and take an informed decision whether or not to offer their shares in the Open Offer. |
| 13. | Details of Independent Advisors, if any. | None |
| 14. | Any other matter(s) to be highlighted | None |

To the best of our knowledge and belief, after making proper enquiry, the information contained in or accompanying this statement is, in all material respect, true and correct and not misleading, whether by omission of any information or otherwise, and includes all the information required to be disclosed by the Target Company under the SEBI (SAST) Regulations, 2011.

For **IGARASHI MOTORS INDIA LIMITED**
sd/-
S Radhakrishnan
**Chairman – Committee of Independent Directors**

**Place :** Mumbai
**Date :** March 15, 2018











**பகவான் ஸ்ரீ ஸ்ரீ சத்ய சாய் பாபா**
**அவர்களின் அருளாசியுடனும்,**
**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அருளாசியுடன்,**
**புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும்**
**18.03.2018 அன்று பிறந்த நாள் காணும்**
**மனிதநேயர், சமூக சேவகர், எங்களின் பாசமிகு நண்பர்**

கடந்த 20 ஆண்டுகளாக முதியோர்களின் நலனுக்காக தொண்டாற்றி வரும்
பிரசாந்தி முதியோர் நல்வாழ்வு இல்லத்தின் ஸ்தாபகர்





**திரு.ராஜகோபால பாலாஜி** அவர்கள்


Happy Birthday on 18 March 2018

**பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல**
**இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்**

முதியோர்கள், ஊழியர்கள் மற்றும் அறங்காவலர்கள்

**பிரசாந்தி முதியோர் நல்வாழ்வு இல்லம்** (பதிவு)
(முதியோர் சேவையில் 1998ம் ஆண்டு முதல்)
திருவான்மியூர், பெருங்குடி, சென்னை.
**www.prasanthioldagehome.com**